

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (2.5.2025) அன்று தலைமைச் செயலகத்தில், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்று, பயிற்சி பெற வந்துள்ள தமிழ்நாட்டிற்கான இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் டி. புவனேஸ்வரன், டாக்டர் சி. விநோதினி, டாக்டர் எஸ். பிரசாந்த், டாக்டர் எம். சுபதர்ஷினி, ஆர். வெங்கடேஸ்வரன், அம்ருதா எஸ். குமார், டி. மாலதி, கே.எம். கார்த்திக் ராஜா, விவேக் யாதவ், காஞ்சன் சவுத்திரி, கிருத்தி காம்னா, ராகுல் குமார், சேத்ரிமாயும் தீபி சானு ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், ப.,மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (2.5.2025) தலைமைச் செயலகத்தில், நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாடு பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.05.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 151 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் வ. தட்சிணா மூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த. ஆபிரகாம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா. முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று ( 2.05.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 151 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், , வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த. ஆபிரகாம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா. முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1.5.2025 அன்று திருவள்ளூர் மாவட்டம் ஈக்காடு கண்டிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் கீழ் திருவள்ளூர் புறவழிச்சாலை முதல் திருப்பெரும்புதூர் வரை 2,689.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30.10 கி.மீட்டர் நீளத்திற்கு புதிய ஆறு வழிச்சாலை மற்றும் சாலையின் இருபுறமும் இரு வழித்தடத்தினை கொண்ட சேவைச் சாலை அமைத்தல் பணிகளை தொடங்கி வைத்து, சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் புகைப்படங்களை பார்வையிட்டார். இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, வி.ஜி.இராஜேந்திரன், எஸ்.சந்திரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர். இரா.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் ஆகியோர் உடனிருந்தனர்.

## ரூ.2689.70 கோடி மதிப்பில் சென்னை எல்லைச் சாலைத் திட்டத்தின் கீழ்

# புதிய ஆறு வழிச்சாலை - சேவைச் சாலை அமைக்கும் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 3 -

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை எல்லைச் சாலைத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் புறவழிச் சாலை முதல் திருப்பெரும்புதூர் வரை 2,689.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30.10 கி.மீட்டர் நீளத்திற்கு புதிய ஆறு வழிச்சாலை மற்றும் சாலையின் இருபுறமும் இரு வழித்தடத்தினை கொண்ட சேவைச் சாலை அமைத்தல் பணிகளை தொடங்கி வைத்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சார்பில் நேற்று முன்தினம் (1.5.2025) திருவள்ளூர் மாவட்டம் ஈக்காடு கண்டிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் கீழ் திரு வள்ளூர் புறவழிச்சாலை முதல் திருப்பெரும்புதூர் வரை 2,689.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30.10 கி.மீட்டர் நீளத்திற்கு கடினப்புருவத்துடன் கூடிய புதிய ஆறு வழிச்சாலை மற்றும் சாலையின் இருபுறமும் இரு வழித்தடத்தினை கொண்ட சேவைச் சாலை அமைத்தல் பணிகளை தொடங்கி வைத்தார்.

**தொழில் வளங்களை அதிகரிக்க!**

தமிழ்நாட்டின் வடக்கு மற்றும் தென் மாவட்டங்கள், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வரும் கனரக வாகனங்கள் எண்ணூர் மற்றும் காட்டுப் பள்ளி துறைமுகங்களுக்கு எளிதாக சென்றடையவும், கனரக வாகன போக்குவரத்தால் ஏற்படும் நெருக்கடியை குறைப்பதற்கும், வணிக மற்றும் தொழில் வளங்களை அதிகரிக்கவும் சென்னை எல்லைச் சாலை அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இச்சாலை எண்ணூர் துறைமுகத்திலிருந்து மாமல்லபுரம் வரை 132.87 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்படவுள்ளது.

சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பிரிவு - 3 ன் கீழ் திருவள்ளூர் புறவழிச்சாலை முதல் திருப்பெரும்புதூர் வரை 30.10 கி.மீ நீளத்திற்கு புதிய ஆறுவழிச்சாலை மற்றும் இருவழி சேவைச்சாலை (இருபுறமும்) அமைக்க மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு, திருவள்ளூர் புற வழிச்சாலை யிலிருந்து வெங்காத்தூர் வரை 10.40 கி.மீ நீளத்திற் ற்கான சாலைப் பணிகள் 1,133.20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், வெங்காத்தூர் முதல் செங்காடு வரை 10.00 கி.மீ நீளத்திற்கான சாலைப் பணிகள் 593.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், செங்காடு முதல் திருப்பெரும்புதூர் வரை 9.70 கி.மீ நீளத்திற்கான சாலைப் பணிகள் 963.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 30.10 கி.மீட்டர் சாலைப் பணிகள் 2,689.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.

இப்பணியில், 2 உயர்மட்ட மேம்பாலங்கள், 1 இரயில்வே மேம்பாலம் மற்றும் 2 பெரிய பாலங்கள் கட்டப்படவுள்ளன.

மேலும் சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு1 ன் கீழ் எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி தச்சூர் வரை 2,122.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு செயல்படுத்தப்படுகிறது. பிரிவு1 ன் கீழ் தற்போது வரை 35 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன.

சென்னை எல்லைச் சாலைத் திட்டம் பிரிவு2 ன் கீழ் தச்சூரில் தொடங்கி திருவள்ளூர் புறவழிச்சாலை வரை 1,539.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 26.10 கிலோ மீட்டர் நீளத்திற்கு செயல்படுத்தப்படுகிறது. பிரிவு2 ன் கீழ் தற்போது வரை 68 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன.

**விரிவான திட்ட அறிக்கை!**

சென்னை எல்லைச் சாலைத் திட்டம் பிரிவு - 4 ஆனது திருப்பெரும்புதூரில் தொடங்கி சிங்கப்பெருமாள் கோயில் வரை 23.80 கி.மீ நீளம் கொண்டதாகும். இச்சாலை மாநில அரசின் செலவில் ஏற்கனவே ஆறு வழிச்சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையை சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் தரத்திற்கு ஏற்ப உயர்த்தி நுழைவு கட்டுப்படுத்தப்பட்ட சாலையாக அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு - 5 ஆனது சிங்கப் பெருமாள் கோயில் முதல் மாமல்லபுரம் அருகே பூஞ்சேரி சந்திப்பு வரை மொத்தம் 28.24 கி.மீ நீளம் அமைக்கப்படவுள்ளது. தற்போது நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ண சாமி, வி.ஜி.இராஜேந்திரன், எஸ்.சந்திரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர். இரா. செல்வராஜ் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் எஸ்.பழனிவேல் உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திருத்தணி நகராட்சியில்

# ரூ.3.02 கோடியில் பெருந்தலைவர் காமராஜர் காய்கறி நாளங்காடி கட்டடம்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

*திருவள்ளூர், மே 3 -*

*திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (2023 24) திட்டத்தின் கீழ் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் காய்கறி நளங்காடி கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப் தலைமை தங்கினார், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் முன்னிலை வகித்தார் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, வரவேற்பு உரையாற்றினார்.*

*இதில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு சிறுபான்மையினர் மலர் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு காய்கறி நளங்காடி கட்டிடத்தினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பார்வையிட்டார்கள் பின்னர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் தெரிவிக்கையில், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (202324) திட்டத்தின் கீழ் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் 97 கடைகள் கொண்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் காய்கறி நளங்காடி கட்டடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் நகராட்சி துறையின் கீழ் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று உத்தரவுக்கிணங்க நகராட்சி நிர்வாகத்தின் சார்பாக 35 மாநகராட்சிகள் , 160 மேற்பட்ட நகராட்சிகள், 400 க்கும் மேற்பட்ட பேரூராட்சிகள் உரு வாக்கப்பட்டு பொதுமக்களுக்கு தேவையான காய்கறி அங்காடி, பேருந்து நிலையம், குடிநீர் வசதி கழிப்பறை, சாலை வசதி, கழிவுநீர் வடிகால் போன்ற பணிகள் ஒவ்வொரு நகராட்சி பகுதிகளிலும் நடைபெற்று வருகிறது.*

*மேலும், சாலை பணிகளைப் பொறுத்தவரை 3780 பணிகளும், தற்போழுது 5 இலட்சம் எல் இ டி விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளது. மீண்டும் 125000 எல் இ டி விளக்குகள் பொருத்துவதற்கு பணிகள் நடைபெற்று வருகிறது. அதுமட்டுமில்லாமல் ஒவ்வொரு நகராட்சி பகுதிகளிலும் கழிவுநீர் வடிகால் அமைக்கும் பணிகளும், மேலும் , நகராட்சி பகுதியில் உள்ள பள்ளிக்கூடங்கள் தரம் உயர்த்தப்பட்டும், அங்கன்வாடி மையங்கள் புது ப்பிக்கப் பட்டும் உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் மேயராகவும் இருந்திருப்பதால் நகராட்சி நிர்வாக த்தின் கீழ் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் நிவர்த்தி செய்யும் வகையில் நிதிகளை ஒதுக்கீடு செய்து தருகிறார்கள் இந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துள்ளார் கள் கோரிக்கைகள் அனைத்தும் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்டு வருவதால் அவரே. இக் கோரிக்கையினை. முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கொண்டு சென்று தேவையான நிதியினை பெற்று கோரிக்கைகளை பூர்த்தி செய்து கொடுப்பார்கள். பொதுமக்களின் தேவைகளை அறிந்து செயல்படும் முதலமைச்சர் இந்தியாவிலேயே முதலமைச்சர் அவர்கள் தான் என நிர்வாக த்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தர்.*

*பின்னர் 25 தூய்மை பணியாளர்களுக்கு நல வாரிய அட்டையினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அவர்கள் வழங்கினார்கள்.*

*தொடர்ந்து, திருத்தணி நகராட்சி பகுதியில் ரூ.15.67 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலைய கட்டட பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அவர்கள் பார்வையிட்டார்கள்.*

*இந்நிகழ்வில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் ஆவடி மாநகராட்சி மேயர் கந்தசாமி, நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் லெட்சுமி, தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் தீபா, திருத்தணி நகராட்சி ஆணையர் பால சுப்பிர மணியம், பொறியாளர் ராஜாவிஜய காமராஜ், பொதுப்பணி மேற்பார்வையாளர் நாகராஜன், நகராட்சி துணைத் தலைவர் சாமிராஜ், திருத்தணி நகரக் கழகச் செயலாளர் வி. வினோத்குமார், மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

*முடிவில் நகர்மன்ற தலைவர் சரஸ்வதி பூபதி அனைவருக்கும் நன்றி கூறினார்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று அறிவித்ததை தொடர்ந்து அதற்கான இடம் தேர்வு செய்வது குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன் கும்பகோணம் அரசினர் ஆண்கள் கலைக்கல்லூரி வளாக விக்டோரியா ஆடவர் விடுதியினை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.பிரியங்கா பங்கஜம், தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன், மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.தியாகராஜன் ஆகியோர் உள்ளனர்.